Judicial Form No.53

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, UTHANGARAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | CC.No.57/2018 | | |
| Witness for Complainant | PW8– Chief and Cross | | |
| Name | ராமமூர்த்தி | Taluk : | |
| Father's / Husband Name | கண்ணையன் | Calling : | |
| Village | | Age : | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 09.03.2026.

துவக்க நேரம்– 3.30 PM

**அரசு தரப்பில் முதல் விசாரணை:**

நான் தற்போது காவல்துறையில் ஓய்வு பெற்று ஜோலார்பேட்டையில் வசித்து வருகிறேன். நான் ஊத்தங்கரை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த 5.08.2017 ம் தேதி என்னுடன் பணியில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.ராதாகிருஷ்ணன் என்பவர் வாதி பூபதி என்பவர் கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண் 355/2017 சட்டப்பிரிவுகள் 279, 337 இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். வழக்கில் பதிவு செய்யப்பட்ட **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், 06.08.2017 ம் தேதி காலை 7.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் நந்தகோபால் மற்றும் ராஜா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். **பார்வை மகஜர் அ.சா.ஆ. 5ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ., 6**

**ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு சாட்சிகள் பூபதி, அலமேலு, சதீஷ்குமார், சுப்பிரமணி மகஜர் சாட்சிகள் நந்தகோபால் மற்றும் ராஜா ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேற்படி பார்வை மகஜர், மாதிரி வரைபடம் மற்றும் வாக்குமூலங்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். 07.08.2017 ம் தேதி வழக்கில் காயம் அடைந்த தேவராஜ் என்பவர் சிகிச்சை பலனளிக்காமல் சேலம் அரசு மருத்துவமனையில் இறந்து விட்டதால் இவ்வழக்கினை சட்டப்பிரிவினை இதவ பிரிவுகள் 297, 337 ல் இருந்து இதச பிரிவுகள் 297, 304(A) ஆக பிரிவு மாற்றம் செய்து வழக்கு கோபினை எனது பார்வைக்கு வைத்தார். **சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை அசா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 08.08.2017 ம் தேதி காலை 6.00 மணிக்கு ஊத்தங்கரையிலிருந்து சேலம் அரசு மருத்துவமனை சென்று காலை 8 மணிக்கு சவக்கிடங்கின் முன்பு பஞ்சாயத்தர்கள் முன்னிலையில் தேவராஜ் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள் பூபதி, அலமேலு, சுப்ரமணி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு மேற்படி தேவராஜ் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்காக மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் தலைமைக்காவலர் 942. சத்தியமூர்த்தி மூலம் கொடுத்து பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் பிரேத பரிசோதனை முடிந்த பிறகு தேவராஜன் உடலை உறவினர்களிடம் ஒப்படைத்தோம். இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய மற்றும் விபத்துக்குள்ளான வாகனங்களை மோட்டார் வாகன ஆய்வாளரின் பரிசோதனைக்காக அனுப்பி வைத்தேன். மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரித்தும் அவரிடம் பரிசோதனை ஆய்வு அறிக்கையை பெற்றேன். **TN 24 J 8771 இருசக்க வாகன மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**விபத்துக்குள்ளான TN 24 P 1128 இருசக்கர வாகன மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கில் பிரேத பரிசோதனை செய்த மருத்துவரிடம் பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 279, 304(A) ஆகியவற்றின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடம் தேசிய நெடுஞ்சாலை என்றால் சரி. வழக்கில் புகாரில் எதிரியின் வாகனம் இறந்த நபரின் வாகனத்தின் மீது மோதியதாக புகாரில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் இறந்த நபரின் வாகனம் தான் எதிரி ஓட்டி வந்ததாக சொல்லப்படும் வாகனத்தின் மீது இடித்து விட்டதாக புகாரில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வரைபடத்தில் எதிரி சாலையின் இடது புறமாக வந்ததாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஊத்தங்கரை டு திருப்பத்தூர் சாலையில் இடது புறமாக வந்ததாக உள்ளது என்றால் சரிதான். எனது விசாரணையில் சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக யாரும் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. தேசிய நெடுஞ்சாலையில் ஒரே சமயத்தில் இரண்டு பேருந்துகள் போகும் அளவுக்கு சாலை பெரிதாக உள்ளது என்றால் சரிதான். எதிரி கொடுத்த புகார் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால் எதிரி புகார் கொடுக்கவில்லை. புகார்தாரரிடம் கையொப்பம் மட்டும் பெற்றுக்கொண்டு அதில் உள்ள சங்கதிகளை நாங்களாக எழுதிக்கொண்டோம் என்றால் சரியல்ல. சம்பவ இடம் செல்லவில்லை காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்கள் உற்பத்தி செய்யப்பட்டன என்றால் இல்லை. எதிரிகள் மீது தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை

தாக்கல் செய்யப்பட்டுள்ளது, எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

**முடிவு நேரம்– 4.00 PM**

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct".

D SARAVANAN Digitally signed by D SARAVANAN

Judicial Magistrate
Uthangarai.